Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 325
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஐப்பசி 7 றஜப் 19 செவ்வாய்க்கிழமை [24-10-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# கவர்னர் ஜெனரலுக்கு டில்லியில் அமோக வரவேற்பு

## மகாத்மா சமாதிக்கும் விஜயம்

புதுடில்லி, அக்.23

**இலங்கை கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவாவும் அவரது பாரியாரும் இன்று புதுடில்லிக்கு விஜயம்செய்தபோது அவர்களுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.**

விமானநிலையத்தில் இந்திய ஜனாதிபதி ஸாகிர் ஹுசெயின் உட்பட பல அரசியல் ராஜதந்திரீகர்களும் அவர்களை வரவேற்றனர். இன்று மாலை திரு. கோபல்லவா ராஜ்காட்டிலுள்ள மகாத்மாகாந்தி சிலைக்கு அஞ்சலி செலுத்தினர்.

இலங்கை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவாவும் அவரது பாரியாரும் இன்றுகாலை பாலம் விமானநிலையத்தை வந்தடைந்தபோது அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

21 பீரங்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டதுடன் விமானநிலையத்தில் பள்ளி மாணவர்கள் குதூகலத்துடன்பாரதஇலங்கைக்கொடிகள்தாங்கிகவர்னர் ஜெனரலையும் அவரதுமனைவியாரையும் வரவேற்றனர்.

டில்லிமேயர், பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் பலநாடுகளின் ராஜாங்க தூதுவர்கள் ஆகியோர் கவர்னர் ஜெனரலை வரவேற்கவந்திருந்தனர்.

இந்திய ஜனாதிபதி திரு. சாஹிர் குசேன், கவர்னர் ஜெனரலையும் அவரது மனைவியையும் வரவேற்றுப்பேசுகையில் இந்தியா, இலங்கை ஆகிய இருநாடுகளின் தொன்மையான மரபுச் செல்வங்கள் ஒன்றேயென்றும் இவ்வித சந்திப்பு இருநாடுகளின் நல்லுறவை மேலும் பலப்படுத்த வழி அமைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசிய கவர்னர் ஜெனரல் பல விஷயங்களில் இருநாடுகளும் பொதுப் பிணைப்புக் கொண்டுள்ளது

[6-ம் பக்கம் பார்க்க]

பூன்வாட் விவகாரம்:

## பர்மிய அதிகாரிகள் இன்று திரும்புவர்

கொழும்பு, திங்கள்

ஓர் ஆசியநாட்டுத்தூதுவரின் மனைவி இன்று தமது நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அந்த நாட்டு தூதுவரின் புதல்வர்தான் இப்படிப் பெண்வேடம் பூண்டுபோயிருக்கலாமோ என்று பொலிசார் சந்தேகிப்பதாகத்தெரிகின்றது.

திருமதி பூன்வாட்டின் மரணம் சம்பந்தமாக ஆராய வந்துள்ள பர்மிய அதிகாரிகள் கோஷ்டி இன்று சுமார் இரண்டரைமணி நேரம் வெளிவிவகாரஅமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். பர்மா தூதரின் வாசஸ்தலத்திலும் 3 மணி நேரம் தங்கினார்கள். இந்தக்கோஷ்டியில் பர்மிய உளவுப் பொலிசைச் சேர்ந்த இருவர் இருப்பதாகவும் கருதப்படுகின்றது.

திருமதி பூன்வாட் மரணமானதாகக் கருதப்படும் இடங்களையும் அவர்கள் சென்று பார்வையிட்டனர். இந்த அதிகாரிகள் நாளைய தினம் பர்மா திரும்புவார்கள். பர்மியதூதரும் அவர்களுடன் செல்லக்கூடும்.

## கச்சதீவு பிரச்னைக்கு விரைவில் தீர்வு ஏற்படும்

### பிரதிநிதிகள் சபையில் பிரதம மந்திரி தகவல்

கொழும்பு, திங்கள்

**கச்சதீவு யாருக்குச் சொந்தம்? இலங்கைக்கா அல்லது இந்தியாவுக்கா என்ற விவகாரம் மிக விரைவில் தீர்ந்துவிடும் என்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று பிரதிநிதிகள்சபையில் தெரிவித்தார்.**

திவிலுபிட்டிய எம். பி. திரு. லக்ஸ்மன் ஜயக்கொடியின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் இந்த விளக்கத்தைக் கொடுத்தார்.

''வருடந்தோறும் மார்ச்சு மாதத்தில் கச்சதீவில் நடைபெறும் ஒரு திருவிழாவின் போது அங்கு பெருந்திரளானமக்கள் கூடுகிறார்கள். மதத்தின்பேரால் அங்கு பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அது ஒரு பண்டமாற்று நிலையமாக விளக்குகின்றது. சாராயம், துணிமணிகள், உணவுப்பொருட்கள்மற்றும் ஏராளமான பொருள்கள் அங்கு பண்டமாற்றுச் செய்யப்படுகின்றன. கள்ளக் கடத்தல் மட்டுமின்றி இந்த விழாவின்போது கள்ளக்குடியேற்றமும் இடம்பெறுவதாகப் பொலிசாரும் அரசாங்க அதிகாரிகளும் அறிவித்திருக்கிறார்கள்'' என்று பிரதமர் தெரிவித்தார்.

'இந்தத்தீவில் நடைபெறும்பெருநாள் யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்க சபையின் ஆதிக்கத்தின் கீழேயோ அல்லது இந்தியாவிலுள்ள கத்தோலிக்கதிருச்சபையின் ஆதிக்கத்தின் கீழேயோ நடப்பதாகத் தெரியவில்லை. நெடுந்தீவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இந்தத்தீவு இருக்கிறது. இத்தீவு எந்த நாட்டுக்குச் சொந்தம் என்ற பிரச்சினை மிகவிரைவில் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கின்றோம். அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகின்றன'' என்று பிரதமர் மேலும்விளக்கினார்,

---

### சீதா செனிவரத்தினவுக்கு செனட் உபதலைவர் பதவி?

கொழும்பு, திங்கள்

செனட்சபையின் உபதலைவராக திருமதி சீதா செனிவரத்ன தெரிவு செய்யப்படலாம்என வதந்திகள் பலமாக அடிபடுகின்றன. இவர் அண்மையில் நடைபெற்ற பெல்மதுல இடைத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிட்டார்.

தீபாவளியை முன்னிட்டு
போயா முன்தினமும் போயா தினமும்
வழக்கம் போல்
டயரும்ஸ்
திறக்கப்பட்டிருக்கும்
54—60, பெரிய தெரு, யாழ்ப்பாணம்.

## பரத நாட்டியம்

சர்வதேச தமிழாராய்ச்சிச் சங்கம், தனது இரண்டாவது சர்வதேச தமிழாராய்ச்சி மாநாட்டை 1968, ஜனவரி 3-ந் திகதி தொடக்கம் 10-ந் திகதி வரை, சென்னையில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளது.

மலேஷியாவில், கோலாலம்பூரில், சென்ற வருடம் நடத்தப்பட்ட முதல் மாநாடு பெரும் வெற்றியாக முடிந்தது. சென்னையில் நடைபெறவிருக்கும் மாநாடும் இதே வெற்றியை ஈட்ட, இலங்கைக் கிளை, தன்னாலான உதவிகளை அளிக்கத் தீர்மானித்துள்ளது. ஓர் உலக ஸ்தாபனமாக மாறி வரும் சர்வதேச தமிழாராய்ச்சிச் சங்கத்துக்குப் பல நிறுவனங்களும், தனி நபர்களும் தாராளமாக நிதி யுதவி அளித்துள்ளனர்.

பரத நாட்டியத்தில் 'டிப்ளோமா' பட்டம் பெற்றவரான செல்வி இந்திரா காந்தி யோகராஜாவின் நடன நிகழ்ச்சி, தீபாவளித்திருநாளாகிய நவம்பர் 1-ம் திகதியன்று, மாலை 6-30 மணிக்கு, யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் முதற்தடவையாக, நாகசுர, தவில் பக்க வாத்தியத்துக்கு பரத நாட்டியம் நிகழ்த்தப்படும் வழக்கத்துக்கு மாறான பல புதுமையான நிகழ்ச்சிகள், இந்நடன நிகழ்ச்சியில் இடம் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**சர்வதேச தமிழாராய்ச்சிச் சங்கம்-இலங்கைக் கிளை.**

300

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வாக்குறுதியை ஒரு போதும் மனிதன் மீறக்கூடாது. உயிர்தான் போக நேரிட்டாலும் மனிதன் வாக்குறுதியை காப்பாற்றவேண்டும். மனிதன் வாக்குறுதி கொடுப்பதில் அவசரமின்மையும் அதனை நிறைவேற்றுவதில் துரிதமும் இருக்கவேண்டும்.

— சுவாமி சிவானந்தா.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு ஐப்பசிமீ 7உ (24-10-67)


## நியாயமான கோரிக்கை

கொழும்பில் சர்வகலாசாலை நிறுவிய நல்ல சந்தர்ப்பத்தில் மாணவர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு அவர்கள் வகுப்புகளுக்கு செல்லாது வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது கவலைக்கிடமானதாகும்.

பிரதமரும் கல்வி அமைச்சரும் இந்தப் பிரச்னையை சமாளிக்க பிரயத்தனம் செய்தது வரவேற்கத்தக்கதே. சர்வகலாசாலைப் பெயரில் என்ன தங்கியிருக்கின்றதென்றும், உண்மையான கல்வித்தொண்டிலேயே கலாசாலையின் மாற்றம் தங்கியுள்ளது என்றும் பலர் சொல்லக்கூடும், ஆனால் எம் நாட்டில் சர்வகலாசாலைகள் சமீப காலத்திலேயே நிறுவப்பட்டது. பேராசிரியர்களின் ஆராய்ச்சியும், தொழில்நுட்பமும் பிறர் கவனத்திற்கு வரக்கூடிய வசதிகளும் சந்தர்ப்பங்களும் ஏற்படும்வரையும் பிறநாட்டு கணிப்பு ஓரளவில் இலங்கை சர்வகலாசாலையென்றும் பெயர் மதிப்பில்தங்கியிருக்கின்றதென்பதும் உண்மையே. இருபத்தைந்து வருடங்களாக பிற நாடுகளால் மதிக்கப்பட்ட இலங்கை சர்வகலாசாலைக்கு ஒரு தனி மதிப்பு உண்டு, மாணவர்களுக்குக் கல்வி புகட்டும் இடம் பெரதேனியாவாகயிருந்தாலும், கொழும்பாகயிருந்தாலும் இலங்கை சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கு ஒரு பிரத்தியேக மதிப்பும் அங்கீகாரமும் இங்கிலாந்திலும் பிற நாடுகளிலும் ஓரளவிற்கு இருந்துவந்ததென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் கொழும்பு சர்வகலாசாலை எனப் பெயர் சூட்டியுள்ள கல்வி அமைச்சரின் நடவடிக்கை, மாணவர்கள் மனதில் தாங்கள் பெறும் பட்டத்திற்கு உரிய மதிப்பும் அங்கீகாரமும் பிற நாடுகளில் கிடைக்குமா என்ற சந்தேகத்தையும் எழச் செய்துள்ளதில் நியாயமிருக்கவே செய்கிறது. அமைச்சரும் உயர்தர கல்விச்சபையும் தீர்க்கமாக ஆராய்ந்து சமத்துவ நிலைக்கேற்ற முறையில் பெயர் மாற்றமோ அல்லது மாற்றங்களோ செய்வது மாணவர்கள் மத்தியில் நிலவும் பீதியையும், சந்தேகத்தையும் நீக்குவதற்கு வழி அமைக்க உதவும். இது போன்ற முடிவுகள் மிக்க அவதானத்துடனும் பொறுமையுடனும் உயர்தர கல்விச்சபையின் ஆலோசனைகள் கோரி சர்வகலாசாலை ஆசிரியர்களின் அபிப்பிராயத்தையும் அறிந்து நியாயமான முறையில் செய்யப்பட வேண்டும். அதுவே நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் நன்மையளிப்பதாகும். இது விஷயத்தில் பிரதமரின் முயற்சியினால் கல்விஅமைச்சர் மனமாற்றம் அடைந்துள்ளது ஓரளவு வரவேற்கத்தக்கது.

சர்வகலாசாலை மாணவரின் கவலையைப்போக்கி ஆசிரியர்களின் உதவியுடனும் சர்வகலாசாலை மேற்பார்வைச் சபையின் ஆலோசனையுடனும் இப் பிரச்னைக்கு நல்ல தீர்வு காண்பது அவசியம். தற்பொழுது மாணவர்கள்மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தத்தில் எதுவித அசம்பாவிதங்களும் இல்லாது மாணவர்கள் நடந்துகொண்டது பாராட்டத்தக்கது. அவர்களின் உண்மையான பிரச்னைகளை உடனடியாக விசாரித்து, வேண்டிய திருத்தங்கள் செய்து அமைதி நிலவச்செய்வதும் மாணவர்களினதும் அவர்களுக்கு ஆறுதல் கூறி மீண்டும் வகுப்புகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதும் கல்வி அமைச்சரினதும் உயர்தர கல்விச்சபையினதும் தலையாய கடமையாகும். பிரதமரும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி ஏற்ற நடவடிக்கை எடுப்பது நம்பிக்கையளிப்பதாகவிருக்கும்.

ஈழத்தமிழிலக்கிய உலகில் இரசிகமணி கனக. செந்திநாதனைத்தெரியாதவரே இல்லை எனலாம். தமிழ் இலக்கிய உலகுக்கு அவர் ஆற்றிய பணிகள் அளப்பில. தமிழாசிரியரான திரு. செந்திநாதன் ஒரு சிறந்த இலக்கிய விமர்சகன் என்ற வகையிலேயே தமிழிலக்கிய உலகம் அவரை அதிகமாகத்தெரிந்து வைத்திருந்தபோதிலும் அவர் ஒரு சிருஷ்டி இலக்கியகர்த்தாவுமாவார். அவரது ஐம்பதாண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ். இலக்கிய வட்டம் அவரது சொந்த ஊராகிய குரும்பசிட்டியில் இன்று மாலை விழா எடுக்கிறது. இவ்விழாவில் 'வெண்சங்கு' என்ற அவரது சிறுகதைத் தொகுதியுட்பட வேறுநூல்களும் வெளியிடப்படவிருக்கின்றன. இவ்விழாவை முன்னிட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகர் ஆகியோர் வாழ்த்துக்கள் அனுப்பியுள்ளனர். இவ்விழாவை முன்னிட்டு இரசிகமணி பற்றி திரு. க. சி. குலரத்தினம் எழுதியுள்ள கட்டுரை இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

# செந்திநாதன் பெற்ற பேறு

### எம். பி. வாழ்த்துகிறார்

நண்பர் கனக. செந்திநாதன்எழுதுவதற்கென்று பிறந்தவர். அவர் ஓர் ஆசிரியன் என்பதை அறிந்தவரை விட எழுத்தாளன் என அறிந்தவரே அதிகம்.

இவர் எழுதிக்குவித்த நூல்கள், சிறுகதைகள் வாசகர்களது பசியை அடக்கியது உண்மை. பசியடங்கியபின்பும்பாயாசமும், பழமும் சாப்பிடுவது போல, இவரது 50-ம் ஆண்டு நிறைவின் போது வெளிவரும் 'வெண்சங்கு'ம் இரு கட்டுரைத் தொகுதிகளும் அமைகின்றன.

யாழ். இலக்கியவட்டத்திற்கும், வாசகப் பெருமக்களுக்கும் இரசிகமணி சேவை செய்யப்பல்லாண்டு வாழ்ந்து, பல நலம் பெற்றுய்யநாம் கையெடுக்கும் கடவுள் அருள்வாராக.

என் அன்பு வாழ்த்துக்கள்

— மு. சிவசிதம்பரம் [பா. உ., உடுப்பிட்டி.]

இரண்டு தலைமுறைக் காலத்துக்கு முன் பிறந்து, பழைய தமிழாசிரியரிடம் பழைய கல்வி கற்று, சைவமும் தமிழும் குடிபோகாமற் பாதுகாத்த சைவாசிரிய கலாசாலையின் மகோன்னதக் காலத்திலே ஆசிரியப் பயிற்சிபெற்று, பண்டிதமணியவர்களுடைய காவியரசனை பருகி, இயற்கை விவேகி கைலாயமா முனிவருடைய கருத்துக்களை முகந்து, மயிலிட்டி சுவாமிநாதப் பெரியாரின் பீடு நடைப் பெருமிதப் போக்குப் பழகித்தானும் ஒரு மனிதன் எனத் தலைநிமிர்ந்து உலாவும் வாய்ப்பு எல்லோருக்கும் வாய்க்கமாட்டாது.

தாம் செல்லுமிடமெல்லாம் மாணவர் பின் தொடரப் பழைய காலத்திலே கல்விப் பயிரை வேளாண்மை செய்த விற்பத்திமான்கள் யாழ்ப்பாணத்திலே இருந்தார்கள். ஆறுமுகநாவலர், வித்துவ சிரோமணி பொன்னம்பலம்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், வட்டுக்கோட்டை வேளாளன்



முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை சென்றவிடமெல்லாம் பிரிவரிய ஊசிவழி பின் தொடரும் நூல்போற் பின் தொடர்ந்தவர் பலர். தெருவோரம் பாடம் நடந்தது அக்காலத்தில். இந்நாளில், இந்நேரத்தில், இந்தஇடத்தில் ஆசானைக் காணலாம் எனக் கட்டிக்கொண்டு காவல்நின்று மாணவர்கல்வி கற்றார்கள்.

இன்று எழுத்தாளர் பேச்சாளர் எங்கும் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். எழுத்தாளனைப் பற்றி மகாகவிதாகூர் பாடிய பாடல் ஒன்றைப் பேராசிரியர் சீனிவாசராகவன் 'எத்தனையே புத்தகம் அப்பா எழுதுகிறார்' என்ற கதையாக அற்புதமாக மொழிபெயர்த்துள்ளார். மேலே சொல்லப்பட்டபெரியவர்கள் சென்ற வழியில் தானும் ஓரளவுதூரமாவது சென்று தனக்குத் தெரிந்தவற்றைத் தன்னாலியன்றளவு தானஞ் செய்து வருபவர் ஒருவர் நம்மத்தியில் உலாவுதல் நமக்கெல்லாம் பெருமை. அதனிலும் பெருமை அவர் பிறரைக் கண்டு பெருமைப்படாமல் அவர்களையெல்லாம் ஊக்குவித்தல்.

தாகூர் கண்ட எழுத்தாளன் ஒட்டியுலர்ந்த மனிதன் தானே என்பது எனக்கேற்பட்டசந்தேகங்களில்ஒன்று. செந்தி வாத்தியார் எனப்

[6-ம் பக்கம் பார்க்க]

### பல்லாண்டு வாழ்க

இரசிகமணி கனக. செந்திநாதனுக்கு ஐம்பது வயது பூர்த்தியடைந்துள்ளது என்பதை நம்ப முடியவில்லை.

இலக்கியமே, இரசிகமணி கனக. செந்திநாதனின் மூச்சா இருந்து வருகிறது. நம் நாட்டில் தமிழ்மொழியை வளமாக்கி அதற்கு வலுவும், வனப்பும் ஊட்டி வருபவர்களில் இரசிக மணி கனக. செந்திநாதன் முதன்மையானவர். அன்னரது தன்னலமற்ற இலக்கியத் தொண்டினாலேதான் நாம் பல நல்ல எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் அறிந்திருக்கின்றோம்.

அவரை யாழ். இலக்கிய வட்டம் பாராட்டிக் கௌரவிப்பதில் அர்த்தமுண்டு. அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து ஈழத்து இலக்கிய உலகிற்குச் சேவை செய்ய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

— சு. செ. மாணிக்கவாசகர் (உதவி உள்ளூராட்சி ஆணையாளர்.)

## செந்திநாதன் சிறப்பு

''மஹாகவி''

இலக்கியம் என்றால் 'இறந்தவை' என்பதே
அந்த நாள் இருந்த அபிப்பிராயம்.
கம்பன், இளங்கோ, கபிலன், வள்ளுவன்
என்றெலாம் நிறைந்த பெயர்களிடையே,
'வரதர்' என்றும், 'மஹாகவி'' என்றும்
புதுப்புதுப் பெயர்கள் புகுங்கால் எதிர்த்த
அந்தக் காலத்தாட்களைச்
செந்தி நாதர் சிரித்தது பெரிதே.

'சிறுகதை, நாவல் சிறந்தவை' என்றும்,
''பிறிது முளதோ இலக்கியம்?''
பேசியும் எழுதியும் பெரிதாய் திரிவோர்
கவிதை என் றொன்றையே காணுதிருப்பதை.
இந்தக் காலத்து எவரும் அறிவர்
இந்த நிலையிலே இனிய கவியின்
[illegible] விரிக்கும்
செந்தி நாதர் செய்வன இனிதே!

### நாட்டிலும் நகரிலும்

இரணைமடுப் பகுதியில் யானைகள் அட்டகாசம் புரிந்து வருகின்றன என்ற செய்தியை நேற்று இப்பத்திரிகையில் வாசித்திருப்பீர்கள்.

அங்கு சில தினங்களுக்கு முன் நடந்த துக்ககரமான சம்பவம் ஒன்றை நேரில் கண்ட ஒரு 'களனி' [கொலனி] வாசி எனக்கு வர்ணித்தார்.

இரு மருங்கிலும் அடர்ந்த காட்டுப் பற்றைகளுள்ள ஒரு பாதை வழியாக ஒரு அலியன் போய்க்கொண்டிருந்தது. அலியன் என்றால் மந்தையை விட்டுப் பிரிந்து தனியனாகத் திரியும் மதம் கொண்ட யானை. இதுதான் மனிதரையும் பயப்படாமல் தாக்கும். மற்ற யானைகள் தமக்கு ஆபத்து வரப் போகுதென்று கண்டாலொழிய, மனித வாடை பட்டவுடனே பேசாமல் அப்பாற் போய்விடும்.

இந்த அலியனுக்குப் பின்னால் ஒரு லொறி வந்தது. லொறி வரும் இரைச்சல் கேட்டு அலியன் தன் வேகத்தை அதிகரித்தது. ஆனால் காட்டுக்குள் சென்று மறைவதற்கு வசதியான இடைவெளி கிடைக்கவில்லை. பாதை வழியே வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. லொறி பின்னால் உறுமிக்கொண்டே வர யானைக்குத் திகிலும் கோபமும் அதிகரித்தன.

இப்பாதைக்குக் குறுக்கே ஓர் ஒற்றையடிப்பாதை குறுக்கிட்டது. அவ்வழியே வந்தவர் ஒரு வயது போன கமக்காரர். அவருக்குப் பின்னால் சில யார் தூரத்தில் எனக்கு இக்கதையைச் சொன்னவர் வந்துகொண்டிருந்தார். இருவரும் அந்தப் பிரதான பாதையைத் தாண்டி தமது கமத்துக்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

முன்னால் சென்றவர் ஒற்றையடிப்பாதையை விட்டு பிரதான பாதையில் அடி எடுத்து வைக்கவும் பிரதான பாதையில் வந்த யானை அந்த இடைக்குள் நுழையவும் கணக்காயிருந்தது. தமக்கு எதிர் முன்பாக சற்றும் எதிர்பாராத விதமாக ஒன்பது அடி உயரமுள்ள அந்த ராட்சஸ மிருகத்தைக் கண்டதும் அம் மனிதர் அப்படியே விறைத்துப் போனார். 'முருகா' என்று கூவியபடி உடனே தரையில் உட்கார்ந்துவிட்டார்.

அலியன் ஏற்கனவே மனிதருடைய கையால் துப்பாக்கிச்சூடு வாங்கியது போலிருந்தது. இல்லாவிட்டால் அது அலியன் ஆகாதல்லவா? இரண்டு காலில் நடந்து திரியும் தனது பகைவனைக் கண்டதும் அது சற்றும் யோசிக்கவில்லை. தும்பிக்கையைத் தூக்கி ஒரே ஒரு அடி போட்டது. மனிதன் சுருண்டு கீழே விழுந்தான். யானை அத்துடன் விட்டுவிடவில்லை. ஆட்டுக்கடாபோல பின்னங்காலில் எழுந்து நின்று முன்னங்கால் இரண்டாலும் அம்மனிதனின் குற்றுயிரான சடலத்தை மிதித்து உழக்கிச் சாம்பலாக்கியது.

எத்தனையோ மணித்தியாலம் கழித்தும் அந்த இடத்தை விட்டு அகலவில்லையாம். மனிதர் எவரும் அந்த இடத்துக்குக் கிட்ட நெருங்க அச்சப்பட்டு அதை அணுகவில்லை.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆசியபாதுகாப்புக்குஉத்தரவாதம்

## ரஷ்யா, அமெரிக்கா, சீனு உறுதி அளிக்கவேண்டும்

### சிங்கப்பூர் பிரதமர் கோரிக்கை

நியுயோர்க், ஒக். 23

**ஆசிய பாதுகாப்புக்கு ரஷ்யா, அமெரிக்கா, சீனு ஆகிய நாடுகள் உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான்யூ இங்கு ஒரு டெலிவிஷன் பேட்டியில் கேட்டுக்கொண்டார்.**

'சியாட்டோ' என அழைக்கப்படும் தென்கிழக்காசிய ஒப்பந்த ஸ்தாபனத்தை, அது உருவாக்கப்பட்ட போதே, காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு ஜவகர்லால் நேருவுடன் சேர்ந்து தாமும் கண்டித்ததாகச் சிங்கப்பூர் பிரதமர் கூறினுர்.

**'சியாட்டோ' போதுமானதல்ல**

ஆசிய பாதுகாப்புக்கு 'சியாட்டோ' போதுமான உத்தரவாதம் அளிக்கமுடியாதென்பதே தமது கருத்து என்று அவர் குறிப்பிட்டார்.

வட வியட்னும் மீதான குண்டு வீச்சை அமெரிக்கா நிறுத்திவிட்டால், வட வியட்னும் சமாதான மேசைக்கு வந்துவிடுமென்று சொல்வதற்கில்லை" என திரு. லீகுவான்யூ கூறினுர்.

வியட்னும் விவகாரத்தில், நீடித்த பொறுமையையும், கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்குமாறு திரு. லீ, அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டார்.

# மூழ்கடிக்கப்பட்ட இஸ்ரேல் நாசகாரிக் கப்பல்

## 15 பேர் மாண்டனர்

கெயிரோ, ஒக். 23

கடந்த சனிக்கிழமை, மத்தியதரைக் கடலில், ஐ. அ. கு. வினுல் மூழ்கடிக்கப்பட்ட இஸ்ரேலியநாசகாரிக் கப்பலிலிருந்தவர்களில் 15பேர் உயிரிழந்ததாகவும், மற்றும் 36 பேரைக் காணவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இஸ்ரேலிய நாசகாரிக்கப்பல், ஐ. அ. கு. நீர்ப்பிராந்தியத்தில் அத்துமீறிப் பிரவேசித்ததாக ஐ. அ. கு. ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்டிடம் புகார் செய்துள்ளது. இப்புகாரை இஸ்ரேல் மறுத்துள்ளது.

## லண்டனில் வியட்னும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

லண்டன், ஒக். 23

வியட்னும் போர் எதிர்ப்பாளர் ஆயிரக்கணக்கானேர் நேற்று லண்டனிலுள்ள அமெரிக்க தூதரகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். அவர்கள் தூதரகத்தின் முன்னுல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்குமிடையே ஏற்பட்ட மோதல்களில் பலர் காயமுற்றனர். நாற்பதுக்கும் அதிகமானேர் கைது செய்யப்பட்டனர்.

# இந்திய காங்கிரஸ் அக்கிராசனர் பதவி

## இளைஞர் வருவதை இந்திரா விரும்புகிறுர்?

புதுடில்லி, ஒக். 23

ஜபல்பூரில் நடக்கவிருக்கும் அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியின் 10 அம்ச திட்ட அமுல்பற்றிப் பிரதானமாக விவாதம் நடக்குமென்றுலும், அடுத்த காங்கிரஸ் அக்கிராசனராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது பற்றிப் பூர்வாங்க ஆலோசனை நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஒக்டோபர் 27-ந் திகதி ஜபல்பூரில் நடக்கும் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இந்த விஷயம் வரக்கூடும்.

மொத்தம் 17 ராஜ்யங்களில் 9 ராஜ்யங்கள் காங்கிரசின் கையைவிட்டுப் போய்விட்டன. ஆகவே தலைவரை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமெனக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

**காமராஜ் கருத்து**

இரு தடவை இப்பதவியை வகித்து வந்துள்ள திரு. காமராஜ், ஏகமனதாகக் கட்சி தன்னை விரும்பினுலன்றி பதவியில் நீடிக்க விரும்பவில்லை என்று தோன்றுகிறது.

மேலிடத் தலைவர்களில் பெரும்பாலானேர் தங்கள் கருத்தை இன்னும் தெரிவிக்கவில்லை. திரு. பாட்டீல் மட்டும் திரு. காமராஜ் நீடிப்பதைப் பகிரங்கமாக ஆதரித்துள்ளார். திருமதி இந்திரா காந்தியின் கருத்து தெரியும்வரை மற்றவர்கள் காத்திருக்கக்கூடும்.

**இந்திரா விருப்பம்**

திரு. காமராஜ் வேட்பாளராக நின்றுல், திரு. மொரார்ஜிதேசாய் எதிர்க்கமாட்டார் என்று தெரிகிறது. ஆனுல், காலத்துக்கேற்ப பதவியை ஓர் இளம் நபரிடம் ஒப்படைப்பது நலம் எனத் திருமதி இந்திரா காந்தி கருதுவதாகச் சொல்லப்படுகிறது.

அக்ராசனர் தேர்தல் டிசம்பர் முதல் திகதி நடக்கும்.

## வள்ளுவர் தந்த நவீன சட்டம்

சென்னை ஒக். 23

சட்டம் சம்பந்தப்பட்ட சில நவீன கருத்துக்களும் கொள்கைகளும் 2000 வருடங்களுக்கு முன்பே குறளாசிரியருக்குத் தோன்றியிருப்பதாக ராஜ்ய ஆட்சி மொழி [சட்ட] கமிஷன் காரியதரிசி திரு. எம். சண்முகசுப்பிரமணியம் தெரிவித்தார். இதற்கு ஆதாரமாகப் பல குறள்களை அவர் மேற்கோள் காட்டினுர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில், உரைத் தொடர் ஒன்றில் பங்கு பற்றிப் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினுர்.

சட்டம் என்பது ஒருவனின் புறநடத்தை பற்றியும், ஒழுக்கம் என்பது அகநோக்குப் பற்றிய விஷயம் என்றும் சாதாரணமாகக் கருதப்படுகிறது. ஆனுல் குறள் நெறியோ செயல், நோக்கம் இரண்டிலும் தூய்மையை வற்புறுத்துகிறது என்று திரு. சண்முகசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

தாயாரின் பசியைத் தீர்க்க ஒருவன் திருடினுல் அவனது நோக்கம் தூய்மையானதே என்பதை வள்ளுவர் ஒப்புக்கொள்கிறுர். ஆனுல், அதற்காக அவன் செய்கையை மன்னித்துவிடக் கூடாது என்கிறுர்.

குற்ற நோக்கமின்றி இழைக்கப்படும் குற்றம், குற்றமல்ல என்று கூறும் சட்டக் கொள்கையை திருவள்ளுவரும் ஒரு குறளில் எடுத்துக் கூறியிருக்கிறுர்.

கேடிழைக்க வேண்டும் என்ற நோக்கமின்றிச் செய்யப்படும் தீங்கு பாவமாகாது என்று ஒரு குறளில் வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறுர் என்பதைத் திரு. சண்முகசுப்பிரமணியம் எடுத்துக்காட்டினுர்.

## 'சீதன முறைக்கு தடை விதிக்கவும்'

### இந்திய அரசிடம் கோரிக்கை

புதுடில்லி, ஒக். 23

இங்கு கூடிய அகில இந்திய மாதர் சம்மேளனம், சீதன முறையைத் தடை செய்ய உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மத்திய அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

அத்துடன் சிறுபிள்ளைத் திருமணத்துக்கும் தடை விதிக்குமாறு அது இந்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

---

## தென்னுபிரிக்கா மீது ஸாம்பியா புகார்

லுசாக்கா, ஒக். 23

தென்னுபிரிக்கத் துருப்புக்கள், ஹெலிகொப்டர் விமானங்களில் ஸாம்பியன் பிராந்தியத்தினுள் கடந்த வருடம் பல தடவை வந்திறங்கியதாக ஸாம்பியா ஜனதிபதி டாக்டர் கவுண்டா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த ஆபத்தை சந்திப்பதற்காக, சிவிலியன் இரா[illegible] வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# மேற்கு ஜெர்மனி அதிபர் டாக்டர் கெயிஸிங்கர்

## லண்டன் வந்து சேர்ந்தார்

லண்டன், ஒக். 23

மேற்கு ஜெர்மனி அதிபர் டாக்டர் கெயிஸிங்கர், இன்று லண்டன் வந்து சேர்ந்தார். அவர் மூன்று நாட்கள் பிரிட்டனில் தங்குவார்.

டாக்டர் கெயிஸிங்கர், பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனுடனும், மற்றும் தலைவர்களுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்துவார்.

**பிரிட்டிஷ் விண்ணப்பம்**

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டனையும் சேர்ப்பது பற்றி டாக்டர் கெயிஸிங்கர், இப்பேச்சு வார்த்தைகளின் போது, ஆராய்வார்.

இதற்கிடையில், லக்ஸம் போக்கில், ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் கூடியுள்ளனர். அவர்கள், பிரிட்டனின் விண்ணப்பத்தை விவாதிப்பர்.

## பூச்சி புகாத துணிப் பை

வாஷிங்டன், ஒக். 23

சோளமா, கோதுமை மா இன்னும் பிற உணவுப் பொருள்களை வெளிநாடுகளுக்குக் கப்பலேற்றி அனுப்புவதற்கு, புதுமாதிரித் துணிப் பை ஒன்றை அமெரிக்க வேளாண்மை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். பூச்சிகள் ஒன்றும் இந்தப் பைக்குள் புகமுடியாது. இதுவே இதன் தனிச்சிறப்பு.

பருத்தி இழைகளும் வேறு பல இழைகளும் கலந்து தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பையில் உள்ளே காகிதம் உட்புற உறையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூச்சி கொல்லிமருந்து இந்தப் பையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் விதிகளுக்கிணங்க இது இருக்கிறதா என்று உணவு மருந்து இலாகா இந்தப் பையை இப்பொழுது சோதித்து வருகிறது.

**சென்னையில்**

# உலகத் தமிழ் மாநாட்டை இந்தியராஷ்டிரபதிதிறப்பார்

சென்னை, ஒக். 23

சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டை, அடுத்தவருடம் ஜனவரி 3-ந் திகதியன்று, இந்திய ராஷ்டிரபதி சாகிர் ஹூசெயின் தொடக்கிவைப்பார்.

தமிழக முதல்மந்திரி திரு. சி. என். அண்ணுதுரைக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், உலக தமிழ் மகாநாட்டைத் துவக்கிவைக்க அவர் இசைந்துள்ளார்.

---

## ஆள் இல்லாத எனுகு நகர்

எனுகு, ஒக். 23

சமஷ்டி நைஜீரியாவிலிருந்து பிரிந்து சென்ற கிழக்கு நைஜீரியாவான பியாவ்ராவின் தலைநகர் எனுகு, சமஷ்டித் துருப்புகளால் மீண்டும்கைப்பற்றப்பட்டபோது அங்கு ஒரு பிரஜையையும் காண முடியவில்லையெனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிராமங்கள் எல்லாம் எரிக்கப்பட்டிருந்தன ஏறத்தாழ 25,000 மக்கள் எங்கே சென்றுர்கள் என்பதேதெரியவில்லையாம்.

---

## இலவச பஸ் பிரயாணம்

### நோயாளிகளுக்கு

சென்னை, ஒக். 23

கால், கண் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லும் நோயாளிகள் சென்னையில், பஸ்களில் இலவசமாகப் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

இதற்கான திட்டம் வகுக்கப்பட்டு வருவதாக தமிழக அரசாங்க பஸ் போக்குவரத்து மந்திரி திரு. கருணுநிதி தெரிவித்தார்.

---

## பசுக்களுக்கு சுழல்ராட்டினம்

எஸென், ஒக். 23

இங்குள்ள யந்திர சாதனம் பொருத்தப்பட்ட பசுமாட்டுப் பண்ணை, பால் உற்பத்தியைப் பெருக்க சுழலும் மேடை ஒன்று அமைத்துள்ளது.

சுழல் ராட்டின மேடையில் பால் கறக்கப்படும் போது, அதிக பால் கிடைக்கிறதாம்.

தன்னியக்க பால் கறப்புக்கு, ஒரு மணி நேரத்தில் இச்சுழல் ராட்டினம் 250 பசுக்களை அமர்த்தும்.

## விஷம் அருந்தி இளம்பெண் மரணம்

செங்கற்பட்டு, ஒக். 23

யானைப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ராமநாதனின் மனைவி ராணி என்ற 20 வயதுப் பெண், விஷம் சாப்பிட்டு மரணமானுள். ராணியை அவளது கணவன் திட்டியதாகவும், அதனுல் அவள் வாழ்க்கையில் வெறுப்படைந்து விஷம் சாப்பிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

---

## குருளைச் சாரண ஆசிரியர் பயிற்சி

மானிப்பாய், சனி

யாழ்ப்பாண மாவட்ட குருளைச் சாரண ஆசிரியருக்கு 3 நாள் ஆரம்பதருசின்னப்பயிற்சி வகுப்புயாழ் சாரணச் சங்க தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. அநேக பெண் குருளைச் சாரண ஆசிரியர் பயிற்சி பெற்றது குறிப்பிடத் தக்கது. யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்தார். இலங்கைச் சாரணச் சங்க தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்தவர்களான கொழும்பு மாவட்ட குருளை ஆசிரியர் ஸ்ரீகிருஷ்ணராசா, குருளையர் உதவி மாவட்ட ஆணையாளர் திரு. பி. கனகசபாபதி, யாழ்ப்பாண மாவட்ட குருளை ஆசிரியர் திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் என்போர் பயிற்சி வகுப்புக்களை நடாத்தினர். தலைமைக் காரியாலய ஆணையாளர் திரு. ஆர். வி. எஸ். குக்கும் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறை

# நெசவுநிலையங்களை ப. நோ. கூ. சங்கம் பொறுப்பேற்கும்?

குரும்பசிட்டி, ஞாயிறு

அரசாங்கத்தின் உதவியுடன் காங்கேசன்துறைத் தொகுதியில் நிறுவப்பட்டுள்ள 7 கைத்தறி நெசவு நிலையங்களிலும் உற்பத்தி செய்யப்படும் புடவை வகைகள் போதியளவு விற்பனை செய்ய முடியாதநிலையிலுள்ளதாக அறியப்படுகிறது. இந்நிலையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஆராய வலி. வடக்குக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ் தெல்லிப்பழையில் கிராம முன்னேற்றச் சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட மகாநாடு ஒன்றினைக் கூட்டினார்.

ஒவ்வொரு பகுதியிலும் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் வசம் நெசவு நிலையங்களின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு துணி உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருட்களை அவை வழங்கி, தயாராகும் துணிகளைக் கொள்வனவு செய்யவேண்டுமெனக் இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இத் திட்டத்திஞல் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பெண்கள் மாதாந்த அடிப்படையில் வேதனம் பெறவும் முடியும் என எதிர் பார்க்கப்படுகின்றது. மேற்படி ஆலோசனை மேலதிகாரிகளின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிகிறது.

## இடமாற்றம்

சங்கானை, ஞாயிறு

கடந்த பல வருடங்களாகச் சங்கானையில் இருந்த அரசினர் மரக்காலை இம்மாதம் தொடக்கம் மானிப்பாய் காரைநகர் வீதியிலுள்ள சங்கானை கூடத்து அம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள மைதானத்திற்கு இடம் பெயர்ந்துள்ளது.

## லயன்ஸ்கிளப்பின் இலவச வைத்தியசாலை

குருநாகல், திங்கள்

கடந்த 18-ந்திகதி குருநாக்கல் லயன்ஸ் கிளப் ஓர் இலவச வைத்தியசாலையை திறந்து வைத்தது. ஒவ்வொரு போயா தினமும் காலை 9 முதல் 11 மணி வரை திறந்திருக்கும் இவ் வைத்திய சாலையில் லயன்ஸ் கிளப்பைச் சேர்ந்த டாக்டர்கள் பணியாற்றுவார்கள்.

இக்கட்டடத்தைஎழுப்புவதில் பெரும் உதவியாயிருந்த 22வயது கமக்காரர் புஞ்சி பண்டா குத்துவிளக்கேற்றி வைத்தியசாலையைத் திறந்து வைத்தார். கட்டடசெலவுகள் யாவற்றையும் குருநாகல் மேற்றிராணியார் வண. லக்ஷ்மண் ஏற்றுக்கொண்டார்.

முதலாவது தினத்திலே 58 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 24-10-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 நாடோடிப் பாடல், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 பாட்டு — வி. சிவராசா, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 உரைச்சித்திரம், 10-15 தேர்ந்தஇசை.



## பெய்ரூட் செல்கிறார்

யாழ்ப்பாணம் விமான நிலைய உதவித்தளபதி திரு. எஸ். கனகசபை உத்தியோக மேற்படிப்புக்காக அடுத்த மாதம் முதல்வாரத்தில் அராபியநாடாகியபெய்ரூட் செல்கிறார்.

கொழும்பு சென். ஜோசப் கல்லூரியின் பழைய மாணவரானஇவர்இங்கிலாந்தில் றோயல் விமானப்படையில் 6 வருடகால பயிற்சி பெற்று 1951-ம் வருடத்தில் இலங்கை சிவில்விமான சேவை இலாகாவில் விமானப் போக்கு வரத்து கட்டுப்பாட்டு அதிகாரியாகப் பதவி பேற்றார். 1958-ம் வருடத்தில் அவுஸ்திரேலியா சென்று பயிற்சி பெற்றுபின் உதவித் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றார்.

இவர் கரம்பன் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. மு. க. சுப்பையாபிள்ளை தம்பதிகளின் புத்திரராவார்.

## திருடியதாக வழக்கு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பருத்தித்துறையைச் சேர்ந்த எம். பெர்ஞண்டோ, எஸ். பாலசுப்பிரமணியம், எஸ். சபாரத்தினம் ஆகிய மூவரும் அல்வாய் வடக்கு வியாபாரிமூலையைச் சேர்ந்த கே. எஸ். சிற்றம்பலம் என்பவருடைய வீட்டை இவ்வருடம் ஆடிமாதம் முதலாம் திகதி உடைத்து களவாடியதாகவும் களவாடிய பொருட்களை வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார்வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

## குழந்தைகள் பகுதி திறக்கப்படும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் பொது ஜன நூல் நிலையத்தின் குழந்தைகள் பகுதி அடுத்த மாதம் 3-ந்திகதி திறந்து வைக்கப் படவிருக்கிறது. உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் இதனைத் திறந்து வைப்பார்.

பொது ஜன நூல் நிலயத்தின் கீழ் மாடியின் ஒரு பகுதியில் குழந்தைகள் பகுதி இயங்குமெனத் தெரிகின்றது. இதற்காக சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான குழந்தைகள் நூல்களும் வருவிக்கப் பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

பொது ஜன நூல் நிலயத்தில் அமைக்கப்படும் அமெரிக்கக் கலாச்சார நூல் நிலையப்பகுதியும் அடுத்தமாதம் 3-ந்திகதியிலேயே திறந்து வைக்கப்படவிருக்கிறது. இலங்கையிலுள்ள அமெரிக்க ஹைகமிஷனர் திரு. அன்ட்றூ கூறி இதனைத் திறந்து வைப்பார். திரு. றஸ்ஸல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருக்கிறார். [ந. நி]

## கைக்குண்டு வழக்கு

### 26-ந்திகதி விசாரணை

குரும்பசிட்டி, ஞாயிறு

சங்கானைப் பொலிஸார், கைக்குண்டு எறிந்து கார் ஒன்றினைச் சேதப்படுத்தியதாகக் குற்றம் சுமத்தி சங்கானையைச் சேர்ந்த அந்தனி எட்வேட், மாணிக்கம் ஜெயசிங்கம், சின்னத்தம்பி முருகையா, பாலன் பசுபதி, நாகலிங்கம் தில்லைநாதன் ஆகிய ஐவரையும் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் ஆஜர் செய்தனர். ஏற்கனவே மற்றொரு வழக்கில் பாலன் பசுபதி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதால் ஏனைய நான்கு எதிரிகளையும் தலா 300 ரூபா பிணை செலுத்திச் செல்லுமாறு நீதிபதி உத்தரவிட்டார். வழக்கு விசாரணை இம் மாதம் 26-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

[24-10-67]

செவ்வாய்க்கிழமை

[ஐப்பசி மாதம் 7 உ]

நட்சத்திரம் - திருவாதிரை பிற்பகல் இரவு 2-41 மேல் புனர்பூசம்.

திதி - ஷஷ்டி இரவு 12-56 மேல் ஸப்தமி.

சுபநேரம் - 10-32 — 12-02.

ராகுகாலம் - 3-02 — 4-32.

மேஷம் - அதிகாரப் பேறு, அதிர்ஷ்டமுமுண்டு

ரிஷபம் - மந்தநிலை, மறதிக் குணம்.

மிதுனம் - நற்பெயருண்டு, நாவடக்கம் நன்று.

கடகம் - சமயோசித புத்தி, தாராளசித்தி.

சிம்மம் - போதுமென்ற மனமும், பொறுமையும் வேண்டும்.

கன்னி - கைத்தொழில் விருத்தி, காரிய ஜெயம்.

துலாம் - புத்திரர் புகழ், புத்துணர்ச்சி.

விருச்சிகம் - பெரியோர் எதிர்ப்பு, பெரும் பகையுண்டு.

தனுசு - இல்லறம் இனிக்கும், இணைப்பில் இறுக்கம்.

மகரம் - பெருமை வேண்டாம், பொறுமை நன்று.

கும்பம் - தெய்வத்தின் அருள், தேடியது கிடைக்கும்.

மீனம் - காத்திருந்த கடிதம் வரும், களிப்பையும் அள்ளித் தரும்.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

## பெண் மீது வழக்கு

குரும்பசிட்டி, ஞாயிறு

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த கே. நாகம்மா என்னும் பெண் மீது மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் நவம்பர் 3-ம் திகதி சுன்னுகம் பொலிசார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து வழக்குத் தொடருவர்.


அறிவித்தல் BAYER

பொலிடோல்

மெற்றசிஸ்டொக்ஸ்
லெபேசிட்
மட்டாசில்
பொலித்தியோன்
அன்றக்கோல்
குப்ருவிற்
டக்தல்

தற்பொழுது பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள்

"புறேவின்ஷல் டிஸ்றிபியூட்டாஸ்"

இல. 56, கந்தப்பசேகரம் ஒழுங்கை,
(ஒட்டோஸ் கட்டிடத்திற்கு பின்பக்கம்)
யாழ்ப்பாணம்.

★

வ. வி. உ. கூ. சமாசம்

யாழ்ப்பாணம்.

உங்கள் வரவேற்பு அறையில் அழகு



காட்சிக்குவைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான தனித்த கூட்டான தளபாட வகையறுக்களில் இந்த செற் ஒன்ருகும். றெக்ஸீன் மெத்தை தைக்கப்பெற்ற இந்த வரவேற்பறைத் தளபாடசெற் எந்த வீட்டுக்கும் சோபையளிக்கும். 6 தளபாடங்களுமாக ரூ. 275/-

எமதுமற்றொரு சிறப்புப் பொருள்! கண்ணறை ரப்பர்மெத்தைபொருத்திய தளபாடம் தரச்சிறப்புவாய்ந்த வெட்டு மரத்தால் உருவாக்கப்பட்டவை. வழமைவிலையின் பாதிவிலைக்கு கொடுக்கப்படுகின்றன.

இன்றே வருக.

இவ்வித சகாய விலையில் சில குறிப்பிட்ட தளபாடங்களே உள.

எம். எஸ். பர்ணந்து அன்ட் கம்பனி

110, மெயின் வீதி மொரட்டுவை.

கிளைகள்: இல. 1. 317, பெரியமுல்லை, நீர்கொழும்பு. இல. 32 கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது அறிவும் உள்ளூர் அறிவும்

நவம்பம் 15ல் நடைபெறவிருக்கும்
தபால் கந்தோர் தந்தியாளர் பரீட்சைக்கு
உதவும் மாதிரி வினாக்களும் விடைகளும்

### வினாக்கள்

1. மேற்கு ஜேர்மனியின் வேந்தர் (Chancellor) யார்?
2. இலங்கைத் தரைப் படைத் தளபதி யார்?
3. ஐக்கிய நாடுகளில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி யார்?
4. ஐக்கிய இராச்சியத்தின் [United Kingdom] எதிர்க்கட்சித் தலைவர் யார்?
5. லாவோஸ் [Laos] நாட்டின் தலைநகரம் யாது?
6. உலகிலே மிகப்பெரிய உப்பு நீர் வாவி யாது?
7. உலக வங்கி எந்நகரில் அமைந்துளது?
8. ஐக்கிய நாடுகளின் முதலாவது பெண் தலைவராக இருந்தவர் யார்?
9. இலங்கையின் பல்கலைக் கழகம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
10. ஐ. நா. உணவு, விவசாய தாபனத்தின் தலைமை அதிபதி (Director General) யார்?
11. சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தவர் யார்?
12. சர்வதேச அரிசி ஆய்வு நிலையம் [I. R. R. I] எங்குளது?
13. இலங்கையில் அவுஸ்திரேலியாவின் தூதுவராகக் கடமையாற்றுபவர் யார்?
14. இலங்கை மத்திய வங்கியின் கவர்ணர் யார்?
15. சோவியத் ரஷ்யாவின் வெளிநாட்டு மந்திரி யார்?

### விடைகள்

1. டாக்டர் கேட் ஜோஜ் கீசிங்கர் (Dr. Kurt George Kiesinger]
2. பிரிகேடியர். டொன் செனபால அற்றிகல. [Brigadier Don Senapala Attygalla]
3. திரு. ஷேர்லி அமரசிங்க [Shirley Amarasinghe]
4. திரு. எட்வர்ட் ஹீத் [Edward Heath]
5. லுவாங் பிரபாங். [Luong Prabang]
6. கஸ்பியன் கடல்.
7. வாஷிங்டன் டி. சி. [Washington D. C.]
8. திருமதி. விஜயலக்ஷ்மி பண்டிட்.
9. 1945 ஆம் ஆண்டு.
10. டாக்டர் பினே றஞ்சன் சென் [Dr. Binay Ronjan Sen]
11. பேடன் பவல் பிரபு [Lord Baden Powell]
12. மணிலாவில்
13. திரு. ஜி. என். உப்ரன் [G. N. Upton]
14. திரு. வில்லியம் தென்னக்கூன்.
15. திரு. என்டிரீ குரோமிக்கோ [Andrei Gromyto]

அடுத்த வினா விடைகள் 27-10-67 இதழில் வெளிவரும்.






## புத்தகப் படிப்பு மட்டும் போதாது

திருக்கோணமலை, திங்கள் ''புத்தகப்படிப்பு மட்டும் ஒரு குழந்தையின் கல்வியைப் பூரணப்படுத்தி விடாது. இதனாலேயேவிளையாட்டுப்போட்டிகள், பேச்சுப்போட்டிகள் பாடசாலைச் சுற்றுலா முதலியவற்றை நாம் எமது கல்லூரியில் நடத்தி வந்துள்ளோம். மாணவரின் மன வளர்ச்சிக்கு இது உதவுவதோடு கட்டுப்பாட்டுக்கும் இது வழி வகுக்கும் என நம்புகின்றோம்.'' இவ்வாறு திருக்கோணமலை கன்னி மரியாயி பெண்கள் கல்லூரியின் பரிசளிப்பு விழா வின்போது கல்லூரி அதிபர் வண. தாய்.எம்.லிட்வினு தமது அறிக்கையில் தெரிவித்தார்.

அவர் மேலும்குறிப்பிட்டதாவது:

பாடசாலையின் வளர்ச்சிக்கு இங்கு கடமையாற்றிச் சென்ற ஆசிரியர்களும், இப்போது கடமையாற்றும் ஆசிரியர்களும் பெரும் துணை புரிந்துள்ளார்கள். பெற்றோரும் மற்றோரும் இக் கல்லூரிக்கு தந்து வரும் உதவியை நாம் என்றும் மறக்க முடியாது.

கல்லூரியின் இட நெருக்கடிப் பிரச்னைக்குத் தீர்வு காணவும் இவ்வித ஒத்துழைப்பு மேலும் தொடர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

எமது கல்லூரியில் பயின்ற மாணவர் பலர் உயர்ந்த நிலையடைந்துள்ளதையறியும்போது கல்லூரிக்கும் எமக்கும் மிகப் பெருமையாக இருக்கின்றது. இங்கு பயிலும் மாணவரும் இவ்வித நிலையடைய வேண்டுமென்பதே எமது நோக்கம். இந்த நோக்கத்தை அடைவதற்காக நாம் கொண்டிருக்கும் ஆர்வத்துக்குஇறைவனின் துணையிருக்குமென்பது எமது நம்பிக்கை.


## வரி விளம்பரம்

### தேவை

ஆயா அம்மா:

வட்டுக்கோட்டையில் பிள்ளை பராமரிப்பதற்கு ஆயா தேவை. சாப்பாடும் நல்ல சம்பளமும் வழங்கப்படும். நாற்பது வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது. விபரமாக விண்ணப்பிக்கவும். C/O 'ஈழநாடு', 2272.

2272

### விற்பனைக்கு

நாய்க்குட்டிகள்:

பிறிற்ஸ் [Fritz] பொலிஸ் நாய் வழித்தோன்றலில் வந்த கலப்பற்ற அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ஆண் ரூபா 125/-, பெண் ரூபா 100/-. விபரங்களுக்கு இல. 203/6 ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

2275

உ
சிவமயம்
கொக்குவில் மேற்கு
ஞானபண்டித வைத்தியசாலை ஸ்தாபகர்,
வைத்திய கலாநிதி, ஆத்மீகப் பெருந்தகை
உயர்திரு. கோ. க. நடராசா
வைத்தியர்
அவர்கள்
சமாதிநிலை எய்திய குரு பூசையும்
லிங்கப் பிரதிஷ்டா
மஹோற்சவ விழாவும்
29-10-67 - 31-10-67வரை

நிகழும் பிலவங்க ஆண்டு ஐப்பசித்திங்கள் 12-ம் திகதி (29-10-67) ஞாயிற்றுக்கிழமை முதல், 14-ம் திகதி [31-10-67] செவ்வாய்க்கிழமை வரை கொக்குவில் ஞானபண்டித வைத்தியசாலையிலும், கோண்டாவில் - இணுவில் காரைக்கால் நடராஜ முனிவர் ஆச்சிரமத்திலும் நடைபெறவிருக்கும் மேற்படி விழாக்களில் அன்பர்கள் அனைவரும் வந்து கலந்து சமரச ஞானமுனிவராகிய நடராஜ வைத்தியரின் சமாதி நிலைகண்டு எல்லாம்வல்ல இறையருட் கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம்அன்புடன் வேண்டுகின்றோம்.

ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் 21-10-67.

இங்ஙனம்
டாக்டர் ந. சண்முகராஜா
உரிமையாளர், ஞானபண்டித வைத்தியசாலை.

யாழ். மாநகரசபை
## கேள்வி அறிவித்தல்

கீழே கொடுக்கப்படும் வேலைகளுக்கு 5-11-67 நண்பகல் 12 மணி வரை பதிவுபெற்ற ஒப்பந்தக்காரரிடமிருந்து இரண்டு பிரதிகளுடன் கூடிய அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பத்திரத்தின் பெறுமதியாக ரூபா 5/-ம் வைப்புப்பணமாக ரூபா 50/-ம் செலுத்தி 3-11-67 நண்பகல் 12 மணிவரை மாநகர மராமத்து பொறியியலாளரிடம் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்தின் விலை திருப்பித்தரப்படமாட்டாது. ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர் உடன்படிக்கை செய்து கொண்டதும் கேள்வி வைப்புப்பணம் திருப்பித்தரப்படும்.

3. ஏனைய விபரங்களை அலுவலக நேரத்தில் மாநகர மராமத்து பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வேலைகளின் விபரம்

1. சுப்பிரமணியம் பூங்கா கிழக்கு எல்லைச்சுவர் கட்டல்—வட். 1
2. சுப்பிரமணியம் பூங்காவில் எண்முனைக் கட்டிடம் கட்டல்—வட்.1
3. சின்னக் கடைச்சந்தை விஸ்தரித்தல்—வட்.2

கட்சன் செல்வராசா
மாநகர ஆணையாளர்.
299

20-10-67.

அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
மருந்துக்கடை
[புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை]
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

REGAL JAFFNA
Daily at 4-30 9-30 p. m.
Morning Shows at 10-30a.m
Pr, Poya & Holidays
Peter O'Tool Aleo& Cuinness
LAWRENCE of ARABIA

மனோகரா
யாழ்ப்பாணம்
Daily at
4-45, 7-00, 9-45 p. m.
Muscle Beach Party
(Colour)

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர் நடித்த
நாம் மூவர்

3-வது குதூகல வாரம்!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ணா [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
ராஜ் [நீர்கொழும்பு]
மற்றும் 4 திரைகளில்!
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனாதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!
ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனா - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்
குழந்தையும் தெய்வமும்
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4,000 வடபகுதி மாணவர் விவசாயத்தில் ஈடுபடுவர்

—நமது நிருபர்—

யாழ்ப்பாணம். செவ்வாய்

**இவ்வருட காலபோகத்தில் வடபகுதியிலுள்ள சுமார் 4000 கல்லூரி மாணவர்கள் நெல்வயல்களில் களைபிடுங்கும் வேலையை மேற்கொள்வார்கள். இக்களைபிடுங்கும் வேலை பாடசாலைகளில் ஒரு கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. இதற்கான புதிய திட்டமொன்றை கல்வி அமைச்சு தற்போது தயாரித்துள்ளது.**

இத்தகவல்கள் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற மகாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டன. பாடசாலைகளின் மாணவர்களைக் கொண்டு நெல்வயல்களில் களை பிடுங்குவது சம்பந்தமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற மாநாட்டிலேயே இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

பாடசாலைகளின் கல்வி வளர்ச்சி, வேலைப்பயிற்சி பகுதி உதவி டைரக்டரான திரு. வி. துரைசிங்கம் இம்மகாநாட்டுக்கு கல்வி அமைச்சின் சார்பில் விசேஷமாகக் கலந்து கொண்டார். வடபகுதியிலுள்ள எல்லாக் கமக்காரர்களுடனும், சகல கல்லூரி மாணவர்களும் சேர்ந்து நெல் வயல்களில் களை பிடுங்குவது பற்றியும், கல்வி அமைச்சின் இப்புதிய திட்டத்தின் கீழ் வடபகுதியில் மாத்திரம் காலபோக நெல் விளைச்சலில் 4000 மாணவர்கள் கலந்து கொள்வதும் பற்றிய இத் திட்டம் இங்கு பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. துரைசிங்கம் இங்கு பேசுகையில் வடபகுதி மக்களின் விவசாய உற்பத்தியில் நாட்டுமக்களே பெரும் மகிழ்ச்சி கொண்டுள்ளதாகவும், இப்பகுதி பாடசாலை மாணவர்களின் இப்புதிய திட்டத்தின் பெறுபேறுகளை பிரதமமந்திரியும், கல்வி அமைச்சரும் நேரடியாக அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் இதற்காக மாணவர்களுக்கு வேண்டிய சகல போக்குவரத்து வசதிகளையும் அரசாங்கமே செய்து கொடுக்கும் என்றும் தெரிவித்தார். வடபகுதியைச் சேர்ந்த காரியாதிகாரிகள் வட்டார கல்வி பரிசோதகர்கள் ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்,

---

## செந்திநாதன்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பல்லாயிரவர் செல்லமாக அழைக்கும் இவர் தாகூர் கண்ட இலட்சிய எழுத்தாளன் என்பது இவர், தம் மனைவி, தம்மை எழுதவைத்தமைக்கு நன்றி தெரிவிக்குமுகமாகப் புனைந்த கவியிலிருந்து புலப்படுகிறது.

அவள்.
பொன்னைப் பொருளைக் கேட்காமல்
புத்தகமாகிய செல்வமதை
கண்ணிற் கருமணிபோல,
பல காலங்காத்து வருபவளும்...
ஆகிய நாகம்மை என்னும் நாமத்தாள் என்பர்.

## பகிஷ்கரிப்பை மாணவர் கைவிட்டனர்

யாழ்ப்பாணம், செவ்.

வட்டுக்கோட்டையிலுள்ள கல்லூரியொன்றில் பட்டதாரி மாணவர்கள் வகுப்புகளுக்குச்செல்லாமல்நடத்தி வந்த பகிஷ்கரிப்பு இயக்கம் முடிவடைந்து விட்டது.

இன்று மாணவர்கள்வகுப்புக்குத் திரும்புவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்லூரியில் நடைபெற்ற ஒரு நாடகத்தைத் தொடர்ந்து விடுதிமாணவர்கள்ஏழுபேர் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டதாகவும் அதனை ஆட்சேபித்தேபட்டதாரி மாணவர்கள் சுமார் 400 பேர் பகிஷ்கரிப்புஇயக்கம் நடத்தியதாகவும் அதற்கிடையில் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டமாணவர்கள் திருப்பி அழைக்கப்பட்டு விட்டதால் மாணவரின் நேரடி நடவடிக்கை விடப்பட்டதாகவும் மாணவர் பிரதிநிதிகள் நமதுநிருபரிடம் கூறினர்கள்.

---

## கவர்னர்...

[1-ம் பக்கத்] தொடர்ச்சி]

என்றும் இருநாடுகளும்நல்ல விஷயங்களில் ஒத்துழைக்க வாய்ப்பு இருக்கிறதெனவும் தெரிவித்தார். இதனுல் செழிப்பான எதிர்காலம் இருக்குமென்றும் அவர் கூறினர்.

கவர்னர் ஜெனரலுக்கு நாளைடில்லி செய்கோட்டையில் பொதுவரவேற்பளிக்கப்படவிருக்கிறது.

டில்லியில் கவர்னர் ஜெனரல் தம்பதிகள் ராஷ்டிரபதி பவனில்தங்கியிருப்பார்கள்.

இலங்கை கவர்னர் ஜெனரல் இன்று ஜனுதிபதி சாகீர் ஹுசெயினைச் சந்தித்துப் பேசினர். பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் திரு. கோபல்லவாவை இன்று மாலை சந்தித்தார். இந்த சந்திப்புக்களின்போது இலங்கையில் தாம்மகாத்மா காந்தியை சந்தித்த நிகழ்ச்சியை திரு. கோபல்லவா நினைவுகூர்ந்தார். பிறகு அவர் ராஜ்காட்டுக்கு சென்று காந்திஜியின் சமாதிக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்தார்.

# சிறகுவலைச்சட்டம் திருத்தப்படும்

காங்கேசன்துறை, சனி

வட மாகாணத்தில் இருந்து வரும் சிறகுவலைச் சட்டத்தை மாற்றியமைப்பதற்கு மீன்பிடி இலாகா முன் வந்துள்ளது,

வட மாகாணத்தில் இப்போது இருக்கும்சட்டத்தை மாற்றி அமைப்பதற்கான திட்டம குறித்து மீன்பிடி இலாகா வடபகுதி மீனவர்களிடமிருந்து அபிப்பிராயம் கோரியுள்ளது. யரிழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் சிறகு வலை களவு போனதைத் தொடர்ந்தே இவ்வித புதிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

வட பகுதியில் சிறகுவலைகள் பாவிக்கப்படும் இடங்கள், தொழில் செய்யப்பட்டுவரும் இடங்கள், ஆகியனபற்றி மீன்பிடி இலாகாவிற்கு இம்மாதம் 31-ம் திகதிக்குமுன்னராக அபிப்பிராயங்களைமீனவர்கள் அனுப்பி வைக்குமாறு மீன்பிடி இலாகா தலைமைப் பீடம் கோரியுள்ளது.

இப்போது இருந்துவரும் சிறகுவலைச் சட்டத்தைமீனவர்கள் விபரமாகத்தெரிந்து கொள்வதற்காக பருத்தித்துறை, தாளையடி, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு ஆகிய மீன்பிடி இலாகா கந்தோர்களில் இதன் விபரம் வைக்கப்பட்டுள்ளது.

இச்சட்டம் சம்பந்தமாக திருத்தங்களை மீன்பிடி இலாகாவினுல் நியமிக்கப்பட்ட ஒரு கமிஷன் ஆராய்ந்து வருகிறது.




தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

விசேஷ

**மலிவு விற்பனை**

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

எமது சொந்த கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பெற்ற

**கைத்தறி ஜவுளி வகைகளையும்**

மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் தீபாவளி தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இன்றே விஜயஞ் செய்யுங்கள்!

**ஆ. அப்பையா அன் கோ.,**

82, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். போன்: 506

54, பெரியகடை, யாழ்ப்பாணம்.


# லண்டன் பி. ஏ. பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்.

லண்டன் சர்வகலாசாலை பி. ஏ. பரீட்சையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் விசேஷ சித்தி பெற்றுள்ளனர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த அருந்ததி தனபாலசிங்கம், கதிர்காமநாதன் தணிகாசலம் ( தனிப்பட்ட ) ஆகியோரே இவ்விருவர்களாவர்.

சாதாதாண சித்தியடைந்தோர் விபரம் வருமாறு !

யாழ்ப்பர்ணம் !

செல்வி அனுசூயாதேவி மயில்வாகனம், சுப்பிரமணியம் ஞானபூங்கோதை (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி[

மயில்வாகனம் கனகாம்பிகை, மாணிக்கம் செல்லப்பா, நடராசா செல்லையா, நாகரத்தினம் ஐயாத்துரை, நாகரத்தினம் குமாரசாமி, ராஜரத்தினம் அழகம்மா, சின்னக்குட்டி செல்லம்மா, சிவஞானம் அருணுசலம். சுப்பிரமணியம் ராஜலட்சுமி, வேலுப்பிள்ளை கிரேஸியோக ரஞ்சிதமலர். விவேகானந்தன் சுபத்திராதேவி[ இவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகள்]

கொழும்பு !

கொழும்பில் ஏழு பேர் சித்தி பெற்றுள்ளனர். சித்தி பெற்றுள்ள தமிழர் விபரம் வருமாறு :

நகுலேஸ்வரி சின்னையா, கருணுனந்தம் சின்னத்துரை ராஜசிங்கம் செபஸ்தியாம்பிள்ளை அலோசியஸ்.

## தனியார் நெசவு நிலையங்களை எதிர்நோக்கும் அபாயம்

உடுப்பிட்டி, திங்கள்

வடபகுதியில் பல தனியார் நெசவு நிலையங்கள் நஷ்டத்திலேயே இயங்கி வருவதாகவும், அவை விரைவில் மூடப்பட வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. இங்குள்ள நெசவுநிலையங்களுக்குத் தேவையான நெசவு நூல் போதிய அளவு கையிருப்பில் இல்லாது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படடுள்ளது.

இது சம்பந்தமாகக் கரவெட்டியிலுள்ள நெசவு நிலைய அதிபரொருவரை நமது நிருபர் விசாரித்த பொழுது அவர் கூறியதாவது:-

முன்னர் இந்தியாவிலிருந்த பெருந்தொகையான நெசவு நூல்கள் இங்கு இறக்குமதி செய்யப்பட்டன. இதனுல் நாம் நெசவுத்தொழிலை இலங்கையில் முன்னேற்றவும், நெசவு ஆடைகளை இலங்கையர்கள் விரும்பும் வண்ணமும் உற்பத்தி செய்தோம். இந்தியாவில் ரூபா நாணய மதிப்புக் குறைக்கப்பட்டதின் எதிரொலியாக நெசவு நூல்கள் இங்கு வருவது தடைப்பட்டன. இது சம்பந்தமாக இருசாராரும் இதுவரை எவ்வித சுமுகமான முடிவுக்கும் வராததால் நெசவுத்தொழில் நசிந்துவிடுமோ என்று அஞ்சுகிறோம். இப்பொழுது ஜப்பான் எகிப்து ஆகிய இடங்களிலிருந்தே குறைந்தஅளவு நெசவுநூலை வருவிப்பதினுல், நெசவு நூல் விலை உயர்ந்து விட்டது. இதனுல் நெசவு நிலையங்கள் நஷ்டத்தையே அடையும்.

## அமைச்சர் வாழ்த்து

யாழ்ப்பாணம், செவ்.

ஈழத்தின் பிரபல இலக்கிய விமர்சகரும் எழுத்தாளருமான இரசிகமணி கனக.செந்திநாதனின் ஐம்பதாண்டு பூர்த்திவிழா இன்று குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் கொண்டாடப்படுகின்றது. இதனையொட்டி உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம், விழா அமைப்பாளர்களான 'யாழ். இலக்கிய வட்ட'த்துக்கு திரு. செந்திநாதனை வாழ்த்தி அனுப்பியுள்ள செய்தி வருமாறு:

''ஈழத்து இலக்கியவானில் அழியாப்புகழுடன் விளங்கும் இரசிகமணி கனக' செந்திநாதன் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக யாழ். இலக்கியவட்டம் எடுத்துள்ள முயற்சியைப் பாராட்டுகின்றேன்.

தமிழ் இலக்கியத் துறையில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்திய கனக.செந்திநாதன் அவர்கள், கட்டுரை, கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் ஆகியவற்றில் மட்டுமல்ல சமய நூல்கள், சிறுவர் நூல்கள் ஆகியவற்றிலும் தமது திறமையைக் காட்டியுள்ளார்.''

ரஷ்யமொழியிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கக்கூடிய அளவுக்கு இவரது படைப்புக்களின் தரம் உயர்ந்திருப்பதையறிந்து தமிழ்பேசும் இனத்தைச் சேர்ந்தவனென்ற முறையில் பெருமைப்படுகின்றேன்.

இவர்இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்''.

## நாட்டிலும்நகரிலும்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

காடுகளை வெட்டியழித்து கமம் செய்யும் 'களனி' வாசிகளுக்கு யானைகளும், பன்றிகளும், மான், மரைகளும். குரங்குகளும் இன்னும் எத்தனையோ பல விதமான சத்துராதிகளும் இருக்கின்றன. பயிர்களை அழித்து அநியாயம் செய்யும் மிருக ஜாதிகளை மனிதர்கொல்வது நியாயமே! அதேசமயம் காட்டில் வாழும் மிருகங்களுக்கும் உணவு வேண்டாமா?.

நமது யானை வர்க்கமும் மான் முதலிய அழகிய மிருகவர்க்கமும் கமம் செய்பவர்களால் அழிந்துகொண்டு போகின்றனவே என்று மிருக சம்ரட்சண சங்கத்தார் ஒரு பக்கம். காட்டை அழித்து கமம் செய்து உணவைப் பெருக்க காட்டு மிருகங்கள் குறுக்கே நிற்கின்றனவே என்று கமக்காரர் குமுறுவது ஒரு பக்கம்.

இதில் எந்தப் பக்கத்தின் நியாயம் சரியானது?

— வழிப்போக்கன்

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org